**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S.150/2013**

**நாள்.19.08.2021**

**வா.சா.1 கருப்புதுரை**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

பிரதிவாதியின் தந்தை கருப்பணசேர்வையின் இறப்பிற்காக தாக்கல் செய்யப்பட்ட இறப்புசான்று தவறானது என்றால் சரியல்ல. கருப்பணசேர்வை இறப்பிற்காக பிரதிவாதி தரப்பில் நீதிமன்றம் உத்தரவு மூலம் இறப்புசான்று மற்றும் வாரிசு சான்று பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதி தாவா சொத்துக்களை பட்டா பெயர் மாற்ற செய்வதற்காக தான் அசல் வழக்கு எண்.42/2012 தாக்கல் செய்து அதன் பேரில் இறப்பு சான்று, வாரிசுசான்று பெற்று பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக தான் மேற்படி அசல் வழக்கில் உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றால் அது தவறு. கருப்பண்ணசேர்வையின் வாரிசுசான்றுக்காக வாதிகள் தரப்பில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றாலும், வாரிசு சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்ன என்று தெரியவில்லை. வாரிசுசான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கருப்பண்ணசேர்வையின் உடன்பிறந்த சகோதரர்கள் சேர்ந்து பிரதிவாதிக்கு சொத்து கொடுக்கக்கூடாது என்பதற்காக தாவா சொத்திற்கு மோசடியாக பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் அது தவறு. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கருப்பண்ணசேர்வையின் நேரடி வாரிசான பிரதிவாதி மருதாயியம்மாளுக்கு தான் சேரும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தொடர்பாக வேடசந்தூர் வட்டாட்சியர் மற்றும் பழனி கோட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா பெயர் மாற்றம் தொடர்பாக மனு நிலுவையில் உள்ள விபரம் தெரியும். வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

**s/d.Tmt.M.Murugananthi**
**Principal District Munsif**
**Vedasandur**